**ரிதீமாலியத்த பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூன் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 27 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரிதீமாலியத்த பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

----------------------------------------------

மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 619,950 தொகைக்கான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 353,322 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 120,506 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பொது வைப்புக் கணக்கின் மீதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,630,318 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான பலவின கடன்கொடுத்தோர் மீதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 113,733 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி பெறுவனவுகள் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,517,341 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மீதான கூற்றில் மொத்த சொத்துக்கள் மீதியின் கூட்டுத்தொகையுடன் மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்பு மீதிகளின் கூட்டுத்தொகையுடன் ரூபா 4,009,842 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டின் திரண்ட நிதியக் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டிற்கான பேரேடுகளில் பிரதி செய்யும் போது ரூபா 1,561,022 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பேரேட்டின் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் வரவு மீதி, நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,509,807 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 8,095,960 இற்கான 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடு மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே காணப்பட்ட வித்தியாசங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,945,301 ஆக இருந்தது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,729,000 ஆகக் காணப்பட்டதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,849,511 தொகை ஆகும்.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 396(ஈ) | ரூபா 10,200 பெறுமதியான காலம் கடந்துள்ள 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 571 | ரூபா 25,868 பெறுமதியான காலங்கடந்துள்ள 02 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை XXIV ஆம் அத்தியாயம் 1.6 ஆம் பிரிவு | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 09 ஊழியர்களிடம் 5 வருடம் முதல் 27 வரையான காலம் முதல் அறவிடப்படாமல் கடன் மீதி ரூபா 33,548 தொகையாகும். |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,130,179 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,356,498 தொகையாகும்.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 600,242 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 849,302 தொகையாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான 03 கடைகளை திருத்துவதற்காக 2014 செப்டம்பர் மாதம் வாடகையாளரிடம் சபைக்கு எடுத்திருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 05 திகதி வரை அவற்றை திருத்தி மீண்டும் வாடகையாளர்களுக்கு ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

(அ) 2014 ஆண்டின் போது நிர்மாண வேலைகளுக்காக வழங்கியிருந்த முற்பணங்கள் ரூபா 482,258 தொகையினைத் தீர்த்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் மயானத்தை சுற்றி கம்பி வேலி ஒன்று நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 194,700 இற்கான கம்பித் தூண்கள், முற்கம்பிகள் என்பன காணியை உரித்தாக்கல் மற்றும் எல்லைகளை இனங்கண்டிருக்காமையால் 2016 ஆகஸ்ட் 30 திகதி அளவிலும் விளைவற்று காணப்பட்டது.

3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------------

சபையினால் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாமல் சேகரிக்கப்படும் குப்பைகளை ஆந்தா உல்பத சந்தை வளவில் முறையற்ற விதமாக குவிக்கப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டிற்கான சபையின் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

------------------------------------------------

2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4 ஆம் அத்தியாயம் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் எல்லா நிறுவனங்களும் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்து அதனை பயன்படுத்த வேண்டும். எனினும் பிரதேச சபையினால் நடைமுறை ஆண்டில் அவ்வாறு செய்திருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துதல்

---------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஊ) ஒப்பந்த நிருவாகம்

(எ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு